**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 57/2021</u>**

பெயர் : ரெங்கராஜன் P.W.1.

த/பெ. : பத்மநாபன்

தேதி : 21.08.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:</u> –**

1. நான் திரௌபதி அம்மன் கோவிலின் பரம்பரை நிர்வாக அலுவலர் என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அறங்காவலர் குழு எந்த வருடம் யாரால் உருவாக்கப்பட்டது என்றால் எனது மூதாதையார் காலத்திலிருந்தே பரம்பரை பரம்பரையாக மேற்படி கோவிலை நிர்வகித்து வருகிறோம். மேற்படி கோவிலானது எங்களுக்கு தனிப்பட்ட உரிமை உடையது என கோரி இந்து அறநிலையத்துறைக்கு எதிராக நாங்கள் வழக்கு தாக்கல் செய்து விளமபுகை பரிகாரம் பெற்றுள்ளோம். மேற்படி விளம்புகை பரிகாரம் பெற்றதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில் இல்லை.

2. எனது தகப்பனார் பத்மநாபன் அவர்களுக்கு நானும், எனது தம்பி குருமூர்த்தி, மற்றும் எனது சகோதரிகள் தனலெட்சுமி, மீரா, தாமரைச்செல்வி ஆகியோர் வாரிசுகள் ஆவோம். எனது சகோதரிகளும் பரம்பரை நிர்வாகிகளாக வருவார்களா என்றால் வரலாம். ஆனால் எனது சகோதரிகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை 1970 ஆம் ஆண்டு அகோரம் அய்யர் என்பவருக்கு 99 வருட குத்தகைக்கு யார் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் எனது தந்தையும் அவரது சகோதரரும் கொடுத்தார்கள். அதற்கு 40 வருடங்களுக்கு முன்பு எனது பாட்டனார் சுவாமிநாதன் அவர்கள் சோமசுந்தரம் அவர்களுக்கு பதிவு செய்யப்பட்ட குத்தகை ஆவணம் மூலம் தாவா சொத்தை குத்தகைக்கு கொடுத்தார்.

3. சோமசுந்தரம் என்பவரின் மகன் ராமசாமி என்பவர் தான் அகோரம் அய்யருக்கு குத்தகைக்கு கொடுத்தார். அகோரம் அய்யருக்கு எழுதிக்கொடுத்த குத்தகை ஆவணத்தில் குத்தகை காலம் நிலுவையில் உள்ள போது அந்த சொத்தை அதே குத்தகை உரிமை பாத்தியத்தையே வேறு நபர்களுக்கு மாற்றி கொடுக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அகோரம் அய்யர் காலத்தில் திரௌபதி அம்மன் கோவிலுக்கு பகுதி செலுத்தி வந்தாரா என்றால் செலுத்தி வந்தார். அவர் பகுதி செலுத்தியதற்கான கணக்கு பதிவேடுகளை எங்கள் ஆலயத்தில் பராமறித்து

வருகிறோமா என்றால் இல்லை. இது நாள் வரை குத்தகை செலுத்தியதற்கான தனி பதிவேடுகள் எதுவும் பராமறித்து வரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள ரைஸ் மில்லை அகோரம் பிள்ளை தான் கட்டினார் என்றால் சரியல்ல. ஏற்கனவே கட்டப்பட்டிருந்த ரைஸ் மில்லை அகோரம் அய்யர் புதுப்பித்தார். அகோரம் அய்யருக்கு முன்பு தாவா சொத்தை யார் அனுபவித்தார்களோ அவர்கள் தான் ரைஸ் மில்லை கட்டினார்கள் என்றால் சரிதான். குத்தகை உரிமை என்பது அடிமனையை மட்டும் தான் குறிக்கும். அதன் மேல் கட்டப்படும் கட்டிடங்களில் எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரிதான்.

4. 1ம் பிரதிவாதிக்கு அகோரம் அய்யர் அவருடைய குத்தகை காலம் முடிவடைவதற்குள் அவருக்கு உள்ள உரிமைகளோடு சார் பதிவாளர் அலுவலகத்தில் குத்தகை பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு அகோரம் அய்யர் எந்த வருடம் குத்தகை பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. வருடத்திற்கு எவ்வளவு பகுதி என்றால் ரூ.36/– ஆகும். நான் 1ம் பிரதிவாதிக்கு 10 வருடமாக நிலுவையில் உள்ள குத்தகை தொகையான ரூ.360/–ஐ செலுத்துமாறு வாசாஆ 4 ஆன அறிவிப்பை கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மேற்படி அறிவிப்பில் கோவில் கும்பாபிஷேகத்திற்கு பணம் தேவை படுவதால் 1ம் பிரதிவாதியின் குத்தகையை 30.06.2014 தேதியுடன் ரத்து செய்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 4ன் படி 1ம் பிரதிவாதி செலுத்திய ரூ.360/– ஐ நான் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் 1ம் பிரதிவாதி ரூ.2000/–யும், ரூ.10000/–ம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எந்த தொகையும் கொடுக்கவில்லை.

5. நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா இடத்தை காலிசெய்து தரக்கோரி தாக்கல் செய்துள்ளேன். குத்தகை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் 1ம் பிரதிவாதியை காலி செய்ய சொல்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1970ல் அகோரம் அய்யரிடம் 99 வருட குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள குத்தகை பதிவேட்டின் சாராம்சங்கல்தான் 1986ல் 1ம் பிரதிவாதிக்கு அகோரம் அய்யரால் கொடுக்கப்பட்ட குத்தகை பதிவேட்டிலும் உள்ளது என்றால் சரியல்ல. 1930ல் ஏற்பட்ட குத்தகை பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1930ல்ஏற்பட்ட குத்தகை பதிவேடு சாமிநாதனுக்கும், சோமசுந்தரம் பிள்ளைக்கும் ஏற்பட்டதாக இருக்கும் என்றால் சரிதான்.

6. இந்து சமய அறநிலையத்துறையை எதிர்த்து யார் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் நான் தான் தாக்கல் செய்தேன். என்னால் தொடர்ந்து வழக்கை நடத்த முடியாததால் எனது தம்பியின் பெயரில் மாற்றி அவர் வழக்கு நடத்தினார். அந்த வழக்கில் பரம்பரையாக எங்களது அனுபவத்திலும், வசத்திலும் தாவா சொத்து இருந்து வருவதாக கூறி வழக்கு தாக்கல் செய்தேன். எங்கள் மூதாதையரால் டிரஸ்ட் உருவாக்கபட்டதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் எனது சகோதரிகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தை பொறுத்து நேரடியான உரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை 3ம் நபர்களிடம் அதிக விலைக்கு விற்று பணம் பெறவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.